தெளிவுரை

பரந்து ஆழ்ந்த திருப்பாற்கடலில் பெரிய மந்திரமலையைச் சுழலச் செய்து கடல் கடைந்து, தேவர்களுக்கு அமுதம் எடுத்துக் கொடுத்தருளின உபகாரனும், எமக்கு எம்பிரானும், மிகப் பெரிய மூங்கிற் சோலைகளால் சூழப்பட்டு அதனால் சூரியனது கதிர்கள் உள்ளே நுழைய முடியாதபடி இருக்கிற திருமாலிருஞ் சோலைமலையில் மேவியிருக்கின்றவனுமான மைந்தனை வணங்கப் பெற்றேன். (மைந்து – வலிமை, அழகு, வீரம், விருப்பம்.)

2035. கேட்கயான் உற்றது உண்டு கேழலாய் உலகம் கொண்ட*
பூக்கெழு வண்ணனாரைப் போதரக் கனவில் கண்டு*
வாக்கினால் கருமம் தன்னால் மனத்தினால் சிரத்தை தன்னால்*
வேட்கை மீதூர வாங்கி விழுங்கினேற்கு இனியவாறே. (4)

தெளிவுரை

அடியேன் தங்களிடம் கேட்க வேண்டியது ஒன்று உண்டு. பதில் சொல்லுங்கள். வராக அவதாரம் எடுத்துப் பூமியைக் கோட்டில் எடுத்துக் கொண்டு எறிந்த, பூகெழு வண்ணனாரைக் கனவில் எழுந்தருளக் கண்டு மனம் மொழி மெய்களாகிற மூன்று காரணங்களாலும் சிரத்தையோடு வேட்கை மீதூரப் பிடித்து அனுபவித்த எனக்கு இனிமையாய்இருக்கிற விதத்தை என் என்பேன்?

2036. இரும்பு அனன்று உண்ட நீர்போல் எம்பெருமானுக்கு* என்தன்
அரும்பெறல் அன்பு புக்கிட்டு அடிமை பூண்டு உய்ந்து போனேன்*
வரும் புயல் வண்ணனாரை மருவி என் மனத்து வைத்து*
கரும்பின் இன்சாறு போலப் பருகினேற்கு இனியவாறே. (5)

தெளிவுரை

இரும்பு பழுக்கக் காய்ந்து அக்காய்ச்சல் அடங்கும்படி உட்கொண்ட நீர் போல் எம்பெருமான் திறத்தில் என்னுடைய பெறுதற்கு அரிதான அன்பைச் செலுத்தி, அடிமை பூண்டு உய்ந்து போனேன். அன்றியும் அடியார் இருக்கும் இடம் தேடிவருகின்ற மேக வண்ணனான எம்பெருமானை நெருங்கி என் நெஞ்சில் பொருந்த வைத்துக் கரும்பின் இனிய சாறு போல அனுபவித்த எனக்கு ஏற்பட்ட இன்பத்தை எப்படி உரைப்பேன்?

2037. மூவரில் முதல்வன் ஆய ஒருவனை உலகம் கொண்ட*
கோவினைக் குடந்தை மேய குருமணித் திரளை* இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப் பைம்பொன்னை அமரர் சென்னிப்
பூவினை* புகழும் தொண்டர் என் சொல்லிப் புகழ்வர் தாமே. (6)

தெளிவுரை

பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்ற மூன்று மூர்த்திகளும் முதற் கடவுளாக இருப்பவனும், மாவலி இடத்தில் உலகங்களை யாசித்துப்பெற்ற இறைவனும், திருக்குடந்தையில் மேவியிருப்பவனும், சிறந்த நீலமணிக்குவியல் போன்றவனும், இன்பந்தரும் பாட்டுக்களைப் போல, களைமிக்கவனும், பசுந்தேன் போன்றவனும், நாவுக்கு இனியவனும் பசும் பொன் போல விரும்பத்தக்கவனும், தேவர்களுக்குத் தலைமேல் அணியும் மலராய் இருப்பவனுமான எம்பெருமானைப்புகழ்கின்ற தொண்டர்கள் எதைச் சொல்லிப் புகழ்வார்கள்?



2038. இம்மையை மறுமை தன்னை எமக்கு வீடாகி நின்ற*
மெய்ம்மையை விரிந்த சோலை வியன் திருவரங்கம் மேய*
செம்மையைக் கருமை தன்னைத் திருமலை ஒருமையானை*
தன்மையை நினைவார் என்தன் தலைமிசை மன்னுவாரே. (7)

தெளிவுரை

நமக்கு இவ்வுலக இன்பத்தைத் தருபவனும், பரலோகத்து இன்பத்தைத் தருபவனும், உண்மையான மோட்சத்திற்கு உபாயமாய் இருப்பவனும், சோலைகளால் சூழப்பட்ட திருவரங்கத்தில் மேவியிருப்பவனும், செந்நிறத்தையும் கருநிறத்தையும் கொண்டுள்ள விண்ணோர்க்கும் ஒருமைப்பட்டிருப்பவனுமான எம்பெருமானுடைய சீலத்தை நினைக்க வல்லவர்கள் என்னுடைய தலையில் பொருந்தத் தக்கவர்கள்.

2039. வானிடைப் புயலை மாலை வரையிடைப் பிரசம் ஈன்ற*
தேனிடைக் கரும்பின் சாற்றைத் திருவினை மருவி வாழார்*
மானிடப் பிறவி அந்தோ! மதிக்கிலர் கொள்க தம்தம்*
ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு உறுதியே வேண்டினாரே. (8)

தெளிவுரை

வானத்திலுள்ள காள மேகம் போன்ற நிறமுடையவனும் அடியார் திறத்தில் அன்புடையவனும், மலையில் தேனீக்களால் சேர்க்கப்பட்ட தேனின் முனைந்த கரும்பின் இனிய சாறு போல இனியவனும் செல்வனுமாகிய எம்பெருமானை மருவி வாழாதவர்கள் மனிதப் பிறவி எடுத்திருப்பதை எண்ணவில்லை ஐயோ! தங்கள் தங்களுடைய இழிந்த உடலில் வாழ்வதற்கு உறுதியையே விரும்பி நிற்கின்றார்கள். இதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

2040. உள்ளமோ ஒன்றில் நில்லாது ஓசையின் எரி நின்று உண்ணும்*
கொள்ளிமேல் எறும்பு போலக் குழையுமால் என்தன் உள்ளம்*
தெள்ளியீர்! தேவர்க்கு எல்லாம் தேவராய் உலகம் கொண்ட*
ஒள்ளியீர்! உம்மை அல்லால் எழுமையும் துணை இலோமே. (9)

தெளிவுரை

மனமோ என்றால் ஒன்றிலும் நிலைத்து நிற்பதில்லை. ஓசையோடு கூடிய நெருப்பு கவ்வி நின்று உண்ணப் பெற்ற கொள்ளியில் அகப்பட்ட எறும்பு துடிப்பது போல் என் உள்ளம் துடிக்கின்றது. [illegible]

அதனால் தெளிந்த மனம் உடைய வராய் தேவாதி தேவனாய் மாவலியிடம் இரந்து கொண்ட ஒளியுடையீரே! எந்த நிலையிலும் தேவரீரைத் தவிர்த்து று துணை இல்லாதவர்களாக இருக்கிறோம்.

2041. சித்தமும் செவ்வை நில்லாது என்செய்கேன் தீவினையேன்?*
பத்திமைக்கு அன்பு டையேன் ஆவதே! பணியாய்! எந்தாய்!*
முத்தொளி மரத கமே முழங்கொளி முகில்வண்ணா!* என்
அத்த! நின் அடிமை அல்லால் யாதும் ஒன்று அறிகி லேனே. (10)

தெளிவுரை

நெஞ்சமும் உறுதியாய் நிற்பதில்லை. தீவினையேனாகிய நான் என்னசெய்வேன்! எம்பெருமானே! பக்தியின் நிலையில் கீழ்ப்படியான அன்பை உடையவனாய் இருக்குமாறு செய்வாயாக! முத்துப்போன்றவனே! ஒளியுடைய மரகதம் போன்றவனே! காளமேகம் போன்றவனே! என் நாயகனே! உனக்கு அடிமையாய் இருப்பதைத் தவிர வேறொன்றையும் அறியேன்.

2042. தொண்டெல்லாம் பரவி நின்னைத் தொழுதடி பணியு மாறு
கண்டு* தான் கவலை தீர்ப்பான் ஆவதே! பணியாய்! எந்தாய்!*
அண்டமாய் எண்திசைக்கும் ஆதியாய்! நீதி யான*
பண்டமாம் பரம சோதி! நின்னையே பரவு வேனே. (11)

தெளிவுரை

எம்பெருமானே! எல்லாவகையான அடிமைகளையும் செய்ய வேண்டும் என்பதாக வாயாரப் பேசி, உன்னை வணங்கி அடிபணியும் வழிகளைக் கண்டறிந்து நான் மனக்கவலை யைத் தீர்த்துக் கொள்ள முடியுமோ ?

நீ அருளிச் செய்ய வேண்டும் அண்டங்களில்லுள்ளார் எல்லார்க்கும் தலைவனாய் எட்டுத் திசைகளிலும் உள்ள தேவதைகட்கும் காரண பூதனாய் முறைமையான செல்வமாய் இருப்பவனான பரஞ்சோதியே! உன்னையே துதி செய்வேன்.

2043. ஆவியை அரங்க மாலை அழுக்குடம்பு எச்சில் வாயால்*
தூய்மையில் தொண்ட னேன் நான் சொல்லினேன்
தொல்லை நாமம்*
பாவியேன் பிழைத்த வாறென்று அஞ்சினேற்கு அஞ்சல் என்று*
காவி போல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றி
னாரே. (12)

தெளிவுரை

உலகங்கட்கு எல்லாம் ஒருயிராய் இருப்பவனும் திருவரங்கத்தில் ள்ளவனுமான திருமாலை இவ்வழுக்கு உடம்பின் எச்சில் வாயினால் பரிசுத்தம் இல்லாதவனும் கண்ட இடங்களில் தொண்டு பட்டவனுமான நான், அநாதியான திருநாமங்களைச் சொன்னேன், பாவி யான நான் பிழை செய்த விதம் என்னே! என்று அனுதாப முற்ற எனக்கு அபய மளித்து, கருங்குவளை நிறத்தரான பெருமான் வந்து என் கண்களின் உள்ளே தோன்றினார்.



2044. இரும்பு அனன்று உண்ட நீரும் போதரும் கொள்க* என்றன்
அரும்பிணி பாவம் எல்லாம் அகன்றன என்னை விட்டு*
சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட*
கரும்பினைக் கண்டு கொண்டுஎன் கண்ணிணை களிக்கு மாறே!
(13)

தெளிவுரை

இரும்பு பழுக்கக் காய்ச்சப்பெற்று உட் கொண்ட நீரும் வெளியில் வந்து விடும், இதை உறுதியாக நினையுங்கள், ஏனென்றால் என்னுடைய போக்க முடியாதவையாய் நோய்களுக்குக் காரணமான பாவங்கள் எல்லாம் என்னைவிட்டு நீங்கிப் போயின. வண்டுகள் பொருந்திய சோலைகளால் சூழப்பட்ட மாட்சிமை தங்கிய திருவரங்கத்தை இருப்பிடமாகக் கொண்டு வாழ்கிற எம்பெருமானை எனது இரண்டு கண்களும் பார்த்தவண்ணமாய் மகிழ்ச்சி யடையும் விதம் என்னே! என்று வியக்கிறார். (அடி – அடிப்பட)

2045. காவியை வென்ற கண்ணார் கலவியே கருதி* நாளும்
பாவியே னாக எண்ணி அதனுள்ளே பழுத்து ஒழிந்தேன்*
தூவிசேர் அன்னம் மன்னும் சூழ்புனல் குடந்தை யானை*
பாவி யேன் பாவி யாது பாவியேன் ஆயி னேனே. (14)

தெளிவுரை

கரு நெய்தல் மலரைத் தோற்பித்த கண்களை உடையவர்களான மாதர்களின் கலவியை நினைத்துக் கொண்டு அநாதிகாலமாகப் பாவியேனாக எண்ணி அந்தப் பாவப் படுகுழியில் பரிபக்குவனாய் விட்டேன். அழகிய சிறகை யுடைய அன்னப்பறவைகள் பொருந்தி வாழ்கிற சூழ்புனலை உடைய திருக் குடந்தைக்குத் தலைவனான எம்பெருமானைப் பாவியான நான் சிந்தியாமல் மேலும் பாவியேன் ஆயினேன்.

2046. முன்பொலா இராவணன் தன் முதுமதிள் இலங்கை வேவித்து*
அன்பினால் அனுமன் வந்தாங்கு அடியிணை பணிய நின்றார்க்கு*
என்பெலாம் உருகி உக்கிட்டு என்னுடை நெஞ்சம் என்னும்*
அன்பினால் ஞான நீர் கொண்டு ஆட்டுவன் அடியனேனே. (15)

தெளிவுரை

முன்பொருகால் பொல்லாதவனான இராவணனுடைய வலிய மதில்களையுடைய இலங்கையை விடுவித்து அனுமன் மகிழ்ச்சியுடன்வந்து

கிஷ்கிந்தையில் அடியிணைப் பணிய நின்ற பெருமானுக்கு அடியேன் எலும்பெல்லாம் உருகி இற்றுப்போய் என்னுடைய நெஞ்சம் என்னும் அன்பினால் ஞானம், நீர் கொண்டு ஆட்டுவன். பொலா– பொல்லா. (தொகுத்தல்) இணை – இரண்டு

2047. மாயமான் மாயச் செற்று மருதிற நடந்து* வையம்
தாயமா பரவை பொங்கத் தடவரை திரித்து* வானோர்க்கு
ஈயுமால் எம்பி ரானார்க்கு என்னுடைச் சொற்களென்னும்*
தூயமா மாலை கொண்டு சூட்டுவன் தொண்ட னேனே. (16)

தெளிவுரை

மாரீசனாகிய மாயமான் முடியும்படி இரட்டை மருதமரங்கள் முறிந்து விழும்படி நடைகற்றவனும், திரிவிக்ரமனாகி உலகங்களை அளந்து கொண்டவனும், பெரிய கடல் பொங்கும்படியாக, பெரிய மந்திரமலையைச் சுழலச் செய்து அமுதம் எடுத்து, தேவர்களுக்குக் கொடுத்தவனாயும் உள்ள எம்பெருமானுக்கு என்னுடைய வாய் மொழி களாகிற தூய சிறந்த மாலையைக் கொண்டு அடியேன் சூட்டுவேன்.

2048. பேசினார் பிறவி நீத்தார் பேருளான் பெருமை பேசி*
ஏசினார் உய்ந்து போனார் என்பதில் உலகின் வண்ணம்*
பேசினேன் ஏச மாட்டேன் பேதை யேன் பிறவி நீத்தற்கு*
ஆசையோ பெரிது கொள்க அலைகடல் வண்ணர் பாலே. (17)

தெளிவுரை

திருப்பேர் நகரில் எழுந்தருளிருக்கிற எம்பெருமானுடைய பெருமையைப் பேசினவர்கள் பிறவிப்பிணியைக் கடந்தவர்கள், அப்பெருமையை இகழ்ந்து பேசிய சிசுபாலன் முதலியோர்களும் உய்ந்து போனார்கள் என்று சொல்வது இவ்வுலகின் வழக்கமாகும். பேதையேனாகிய நான் அவன் பெருமையைப் பேச வல்ல சிசுபாலனைப்போல் ஏசவும் மாட்டேன். பிறவி நீத்தற்கு அலைகடல் வண்ணர்பால் ஆதரம் அதிகமாகிருக்கின்ற இதை உணாக.

2049. இளப்பினை இயக்கம் நீக்கி இருந்துமுன் இமையைக் கூட்டி*
அளப்பில் ஐம் புலன் அடக்கி அன்பவர் கண்ணே வைத்து*
துளக்கமில் சிந்தை செய்து தோன்றலும் சுடர் விட்டு* ஆங்கே
விளக்கினை விதியின் காண்பார் மெய்ம்மையைக் காண்கிற்
பாரே. (18)

தெளிவுரை

கிலேசங்களைத் தவிர்த்து, ஒரேயிடத்தில் அசையாமல் இருந்து கண்களை மூடிப் பஞ்சேந்திரியங்களை வெளியே செல்லாமல் கட்டுப் படுத்தி



எம்பெருமானைப் பற்றி யே இடைவிடாமல் துதிசெய்து, அ... சுடர்விட்டுத் தோன்றினால் விளக்காகிய எம்பெருமானை ... வேண்டுமென்ற உபாசகர்கள் உள்ளபடியே காண வல்ல... காணகில்லார் என்றபடி, காணலாம் என்பாரும் உளர். (கிலேச... கவலை.)

2050. பிண்டியார் மண்டை யேந்திப் பிறர் மனை திரிதந்து உ...
உண்டியான்* சாபம் தீர்த்த ஒருவனூர்* உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று*
மண்டினார்* உய்யல் அல்லால் மற்றையார்க்கு உய்ய வா...
(19)

தெளிவுரை

தலையோட்டைக் கையில் ஏந்திக்கொண்டு அயலாருடைய வீடு திரிந்து பிச்சையெடுத்துப் பிழைக்கும் ருத்ரனுடைய பிரம்ம... சாபத்தைப் போக்கின எம்பெருமானுடைய திருப்பதிகளாய் உலகம் ... திருக்கண்டியூர், திருவரங்கம், திருமெய்யம், திருக்கச்சி, திருப்பேர் திருக்கடல் மல்லை ஆகிய இத்திருப்பதிகளைப் பேசிக்கொ... நெருங்கியிருப்பவர்களைத் தவிர மற்றையோர்க்கு உய்யும் வழியில்... (பிண்டி – நைந்து போன.)

2051. "வானவர் தங்கள் கோனும் மலர்மிசை அயனும்* நாளும்
தேமலர் தூவி ஏத்தும் சேவடிச் செங்கண் மாலை*
மானவேல் கலியன் சொன்ன வண் தமிழ் மாலை நாலைந்தும்
ஊனமது இன்றி வல்லார் ஒளிவிசும்பு ஆள்வர் தாமே. (20)

தெளிவுரை

தேவேந்திரனும் பிரமனும் நாள் தோறும் தேமலர் தூவித் துதிக்கிற செவ்விய திருவடிகளை உடையவனான எம்பெருமானைக் குறித்... வேற்படையுடைய திருமங்கையாழ்வார் அருளிச் செய்த செந்தமிழினால் ஆ... இப்பாசுரம் இருபதையும் குறையொன்றும் இல்லாமல் கற்றுவல்லவர்க... பரமபதத்தை ஆளப்பெறுவர்.

அடிவரவு

நிதி, காற்று, பாயிரும், கேட்க, இரும்பு, மூவரி, இம்மை, ..., ..., சித்து, தொண்டு, ஆவி, இரும்பு, காவி, முன் மாயம், பேசி, ..., பிண்டி வானவர் – மின்னுருவா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருக்குறுந்தாண்டகம் ஸம்பூர்ணம்.

சேவையேயாகும். திருப்பாசுரங்களைக் கற்று ஓத வல்லவர்களும், வேதங்களை ஓதும் அந்தணர்களும் வாழும் திருப்பேர் என்னும் பதியில் மேவும் எம்பெருமானுக்கு அடியவர்களாகி, எல்லாப் புறப்பற்றுக் களையும் நீக்கிய பரமபாகவதர்களுக்கு எத்துயரும் சாராது, விலகிச் செல்லும்.

அல்லல் நில்லாவே – பரம பாகவதர்களுக்கு வினை வயத்தால் நேரக் கூடிய எத்துகைய துன்பமும் இல்லை.

3161 ● நில்லா அல்லல் நீள்வயல்சூழ்திருப்பேர்மேல் *
நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன் *
சொல்லார் தமிழ் ஆயிரத்துள் இவை பத்தும்
வல்லார் * தொண்டர் ஆள்வது சூழ் பொன் விசும்பே. (11)

தெளிவுரை

தீவினைகள் யாவும் தாமாகவே விலகிச் செல்லும் இயல்புடையதும், நீண்ட வயல்களை யுடையதுமான திருப்பேர் நகர் என்னும் அருள் நகரின் மீது, நல்லோர்கள் வாழும் திருநகரியில் மேவும் ஆழ்வாழ் அருளிச் செய்த திருவாய் மொழிகள் ஓராயிரத்துள், இப்பத்துத் திருப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள், திருத் தொண்டர்கள் ஆவார்கள். அவர்கள், மறுமையில் பரமபதத்தில் இனிது விளங்குவார்கள்.

சொல்லார் தமிழ் – திருவாய்மொழி.

மந்திரச் சொற்கள் பொருந்தி இம்மையிலும் மறுமையிலும் நலம் செய்யுமாறு விளங்குகின்ற திருப்பாசுரங்கள்.

(பொன் விசும்பு – பரமபதம்.)

**ஆழ்வார் திருவடிகளே சரணம்.**

திருமாலதன்பால் விருப்பம்செய்கின்றதோர் கண்டு *
அருமாயத்தன்றகலிப் பானென்? * - பெருமால் நீ
இன்றென்பால் செய்வானென்னென்ன இடருறு நின்றான் *
தன் புகழ்மாறனைத்தான் சூழ்ந்து. (98)

**சீயர் திருவடிகளே சரணம்.**



## பத்தாம் பத்து

### 9.ஆம் திருவாய்மொழி – சூழ்விசும்பு

### திருப்பரம பதம்

**திருநாட்டிற்குச் செல்லும் திருமாலடியார்கள் பெறுகின்ற சிறப்பினை உரைத்தல்**

பண் : கொல்லி
தாளம் : ஏழொத்து

**கலிவிருத்தம்**

(கல்யாணி ராகம் – அடதாளம்)

3162 ● சூழ்விசும்பு அணி முகில் தூரியம் முழக்கின *
ஆழ்கடல் அலை திரை கையெடுத் தாடின *
ஏழ்பொழி லும் வளம் ஏந்திய என்னப்பன் *
வாழ்புகழ் நாரணன் தமரைக்கண்டு உகந்தே. (1)

தெளிவுரை

எந்தையாகிய ஸ்ரீமந் நாராயணனின் அடியவர்கள் வருவதைக் கண்டுகந்து, வானத்தில் அழகுடன் மேவும் மேகங்களெல்லாம் வாத்தியங்களை முழங்குகின்றன, ஆழ்கடல் அலைந்து வரும் திரைகளைக் கைகளாகக் கொண்டு அசைத்து ஆரவாரம் செய்கின்றன. ஏழு உலகங்களும் உபகாரமான வளத்தைக் காட்டி மேவின.

இதில் உள்ள பாசுரங்கள் யாவும் கோயில் திருவாய்மொழியில் அநுசந்திக்கப்படுகின்றன.

3163. நாரணன் தமரைக் கண்டுகந்து நன்னீர் முகில் *
பூரண பொற்குடம் பூரித்தது உயர் விண்ணில் *
நீரணி கடல்கள் நின்றார்த்தன * நெடுவரைத்
தோரணம் நிரைத்து எங்கும் தொழுதனர் உலகே. (2)

தெளிவுரை

ஸ்ரீமந் நாராயணனின் தமர்களான பாகவதர்களின் வருகையைக் கண்டு உகந்து, நல்ல நீரையுடைய முகில்கள் பூரண கும்பம் ஏந்தி வானில் பூரித்து மகிழ்ந்தன; கடல்கள் ஆரவாரம் செய்து ஆர்த்தன; மலைகள் யாவும் நெடிய தோரணங்களாக நிறைந்தன.

3164. தொழுதனர் உலகர்கள் தூபநன் மலர் மழை
பொழிவனர் * பூமியன் றளந்தவன் தமர்முனமே *
எழுமின் என்று இரு மருங்கிசைத்தனர் முனிவர்கள்

**தெளிவுரை**

பூவுலகத்தைத் தாவி யளந்த எம்பெருமானின் அடியவர்களுக்கு நறுமணம் மிக்க தூபங்களைக் காட்டியும், நல்ல மலர்களைத் தூவியும், உகை மாந்தர்கள் தொழுதனர். முனிவர்கள் எல்லோரும் இதுவே வைகுந்தத்திற்குச் செல்கின்ற சரியான பாதை எனத் தேர்ந்து இருமருங்கும் சூழலாயினர்.

3165 எதிர் எதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர் *
கதிரவர் அவரவர் கை நிரை காட்டினர் *
அதிர் குரல் முரசங்கள் அலைகடல் முழக்கொத்த *
மதுவிரி துழாய் முடி மாதவன் தமர்க்கே. (4)

**தெளிவுரை**

துளப மாலை யணிந்த எம்பெருமானின் தமர்களாகிய பாகவதர்களின் வருகைக்காகத் தேவர்கள் தங்கும் இருக்கைகளை அமைத்தனர்; ஆதித்தர் முதலானவர்கள் கைகளால் வரிசை காட்டி மகிழ்ந்து, அலைகடல் என முரசுகளைக் கொட்டி முழங்கித் தமது மகிழ்ச்சிகளை வெளிப் படுத்துவாராயினர்.

(கதிரவர் – ஆதித்தர்கள்.)

3166 மாதவன் தமரென்று வாசலில் வானவர் *
போதுமின் எமதிடம் புகுதுக என்றலும் *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் *
வேதநல் வாயவர் வேள்வியுள் மடுத்தே. (5)

**தெளிவுரை**

எம்பெருமானின் தமர்களாகிய பாகவதர்களின் வருகையை யொட்டி, வானவர்கள் எல்லோரும் கூடி வரவேற்பு நல்கித், திகழ்கின்றனர். தமது தானங்களுக்கு வருகை புரியுமாறு வேண்டுகின்றனர்; வேள்வியின் பயனைச் சேர்த்து வழங்குகின்றனர். கின்னரர்களும் கருடர்களும் கீதங்களால் தமது மகிழ்ச்சிகளை வெளிப்படுத்துகின்றனர்.

3167 வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ் நறும் புகை *
காளங்கள் வலம் புரி கலந்தெங்கும் இசைத்தனர் *
ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று *
வாளொண் கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே. (6)

**தெளிவுரை**

வேதங்களைப் புரியும் மேன்மக்கள் தமது பூசையின் பயனை வழங்கியவர்களாய் நறுமண தூபதீபங்களையிட்டு, சங்குகளையும் முழங்கு கின்றனர். தேவமாதர்கள்,''சக்கராயுதத்தை ஏந்திய எம்பெருமானின்



தமர்களாகிய பாகவதர்களே ! இவ்வானுலகத்தை ஆட்சி ... வாழ்த்துகின்றனர்.

3168. மடந்தையர் வாழ்த்தலும் மருதரும் வசுக்களும் *
தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர் * தொடுகடல்
கிடந்த எம் கேசவன் கிளரொளி மணி முடி *
குடந்தை எங்கோவலன் குடியடி யார்க்கே. (7)

**தெளிவுரை**

திருப்பாற்கடலிலும் திருக்குடந்தையிலும் பள்ளி கொண்டு மே... எம்பெருமான்,கேசவன் எனவும் கோவலன் எனவும் திருநாமங்களை யுடையவர். அப்பரமனின் வழியடியார்களாகிய பாகவதர்களைக் கண்டு தேவமாதர்கள் வாழ்த்துக்களைக் கூற மருத்துக்களும் அட்ட வசுக்களும், தொடர்ந்து தோத்திரங்களைச் சொல்லி ஏத்துதல் ஆயினர்.

குடியடியார் – வழியடியார்கள்.

3169. குடியடி யார் இவர் கோவிந்தன் தனக் கென்று *
முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள *
கொடியணி நெடு மதிள் கோபுரம் குறுகினர் *
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே (8)

**தெளிவுரை**

வழிவழியாக விளங்குகின்ற எம்பெருமானின் அடியவர்களாகிய பரம பாகவதர்கள், மணி முடிகளையுடைய தேவர்களெல்லாம் எதிர் கொண்டு அழைக்கப் பேரழகுடன் வடிவமைக்கப்பட்ட வைகுந்தத்தின் அழகிய தோரணங்கள் கொண்ட கோபுர வாயிலை நண்ணினர்.

3170. வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர் *
வைகுந்தன் தமர் எமர் எமதிடம் புகுதென்று *
வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்தனர் *
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே. (9)

**தெளிவுரை**

வைகுந்தம் எனப் படும் பரமபத வாயிலை நண்ணிய பரம பாகவதர்களை வானவர்களெல்லோரும் வாசலில் நின்று எம்பெருமானின் தமர்கள் வந்துற்றனர் என்று மகிழ்வுடன் வரவேற்பு நல்கி, இவர்கள் எம்மவர்கள் ஆயினார்கள். எம்முடன் இனிது விளங்கிச் சேவைகளை மேற்கொள்வீராக, என உரைத்தனர். பரமபதத்தில் மேவிய வானவர்களும் முனிவர்களும் உவந்து வரவேற்பு நல்கினர். நிலவுலகத்தில் விளங்குகின்ற திருமாலடியார்கள் பரமபதத்தை அடைவது பெரிய சிறப்புக்குரிய தன்றோ !

(வைகுந்தன் – ஸ்ரீமந் நாராயணன்.)

3171. விதிவகை புகுந்தனர் என்று நல் வேதியர் *
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர் *
நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும் *
மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே. (10)

தெளிவுரை

பரமபதத்தில் திருமாலடியார்கள் புகுந்ததைப் பெரும் பேறாகக் கருதி வேதங்களில் வல்ல நித்திய சூரிகள், தமது அதிசய கீதங்களால் உபசாரம் செய்து வரவேற்கவும், திருப்பாதங்களைக் கழுவியும், திருவடி நிலைகளும் நற்சுண்ணமும் நல்கிப் பூரண கும்பங்களைக் கொண்டும் மங்கல தீபங்களை ஏந்தியும் தேவமாதர்கள் நன்கு விளங்கி நிலவினர்.

(நிதி – பெருஞ் செல்வமாகிய எம்பெருமானுடைய திருவடி நிலை, சடாரி.)

3172. • வந்தவர் எதிர் கொள்ள மாமணி மண்டபத்து *
அந்தமில் பேரின்பத்து அடியரோ டிருந்தமை *
கொந்தலர் பொழில் குருகூர்ச் சடகோபன் * சொல்
சந்தங்கள் ஆயிரத்து இவை வல்லார் முனிவரே. (11)

தெளிவுரை

பரமபதத்திற்குச் செல்கின்ற பாகவதர்களை எதிர் கொண்டு அழைத்துச் செல்கின்ற சிறப்பினையும் பேரின்பத்தில் அவர்கள் திளைத்திருக்கும் பேற்றினையும் ஏத்தித்திருநகரியின் தலைவராகிய ஆழ்வார் அருளிச் செய்த சந்தம் மிகும் திருவாய்மொழிகளாகிய ஓராயிரத்துள், இப்பத்துத் திருப்பாசுரங்களையும் ஓத வல்லவர்கள், எம்பெருமானை எக்காலத்திலும் ஏத்தித் தியானித்து விளங்கும் முனிபுங்கவர்களாகத் திகழ்வார்கள்.

திருமாலடியார்கள் பரமபதத்திற்கு ஏகும் போது பெறுகின்ற சிறப்புக்களானவை இவண் ஏத்தியுரைக்கப் பெற்றது. இப்பாசுரங்கள் அனைத்தும் எம்பெருமான் ஆழ்வார் சகிதமாக உள்நின்று விளங்கி அருளிச் செய்யப் பெற்ற நிலையில், மறுமையில் பாகவதர்கள் பெறும் சிறப்புக்களும், பரம பதத்தில் அடியார்கள் சகிதம் விளங்கும் பாங்கும், நன்கு உரைத்தவாறு ஆயின.

பரமபதம் – திருப்பரமபதம். இது நிலவுலகத்தில் இல்லை. திரு நாடு என ஓதப்பெறுவதாகும். இதனைத் தெளி விசும்பு எனவும் உரைப்பர். எம்பெருமான் சுடரொளியாய் மேவி அனுக்கிரகிக்கும் பரமபதம், வைகுந்தம். இதனை அடைவதே ஜீவனுக்குரிய பெரும் பேறு என்பதாம்.

**ஆழ்வார் திருவடிகளே சரணம்.**

• சூழ்ந்து நின்றமால் விசும்பில் தொல்லைவழி காட்ட *
சூழ்ந்ததனை முற்றும் அனுபவித்து * - வாழ்ந்தங்கு
அடியருடனே யிருந்தவாற்றை யுரைசெய்தான் *
முடியமகிழ்சேர் ஞான முனி. (99)

**சீயர் திருவடிகளே சரணம்.**



## பத்தாம் பத்து

### 10ஆம் திருவாய்மொழி – முனியே நான்முகனே

பக்தியால் திளைத்து எம்பெருமானை அடைந்து மகிழ்தலை உணர்த்துதல்

பண் : பஞ்சமம்

தாளம் : ஏழொத்து

### கலிநிலைத்துறை

(கல்யாணி ராகம் – ஆதி தாளம்)

3173. • முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா * என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கண் கருமாணிக்கமே! என் கள்வா! *
தனியேன் ஆருயிரே! என் தலைமிசையாய் வந்திட்டு *
இனி நான் போகலொட்டேன் ஒன்றும் மாயம் செய்யேல்
என்னையே. (1)

தெளிவுரை

தனது சங்கல்பத்தால் யாவற்றையும் நிகழ்த்தும் ஸ்ரீமந் நாராயணனே! நான்முகமுடைய பிரமனாகவும் முக்கண்ணுடைய அரனாகவும் விளங்கும் பெருமானே! கனிந்த வாயும் தாமரைக் கண்களும், துளைக்கப் படாத கருமாணிக்கம் போன்ற திருமேனியும் உடையவராகி, என்னுள்ளத்தைக் கவர்ந்த கள்வரே! என்னுயிரே! என்னுள் கலந்து தானேயாகிக் கலந்த பின்பு தேவரீரைப் பிரிந்து செல்லும்படி இசையேன். என்னை மாயம் செய்து வருத்தாது என்னுள்ளேயே விளங்கு வீராக!

முனி – தனது சங்கல் பத்தால் யாவற்றையும் நிகழ்விக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன். பொல்லா – துளைக்கப் படாத கரியமாணிக்கத்திற்குரிய அடைமொழி.

இத்திருமொழியில் உள்ள 10 பாசுரங்கள் யாவும் கோயில் திருவாய்மொழி என்பதனோடு அநுசந்திக்கப்படுகின்றன.

3174. மாயம் செய்யேல் என்னை உன் திரு மார்வத்து மாலை நங்கை *
வாசம் செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய் *
நேசம் செய்து உன்னோடு என்னை உயிர் வேறின்றி ஒன்றாகவே *
கூசம் செய்யாது கொண்டாய் என்னைக் கூவிக் கொள்ளாய்
வந்தந்தோ! (2)

தெளிவுரை

எம்பெருமானே! என்னை மாயம் செய்து புறத்தே செல்ல விட்டு [illegible] தேவரீருடைய திருமார்பில் வாசம் செய்யும் திருமகளின்மீது ஆணை [illegible] நீது ஆணை! என்னோடு நேசம் செய்து [illegible]

அடிவரவு

[illegible], பால், கருமை, ஆரே, அழல், நடை, வெற்றி, உள்ளே, கொம்மை, [illegible]—பட்டி

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

# நாச்சியார் திருமொழி

## 14 ஆம் திருமொழி பட்டி மேய்ந்து

### விருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டமை கூறுதல்

**(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)**

(கல்யாணி ராகம் – ரூபக தாளம்)

637. பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவற்கோர் கீழ்க்கன்றாய் *
இட்டீறிட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே *
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி *
விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. (1)

தெளிவுரை

கண்ணபிரான் என்ற கறுத்த காளையொன்று காவல் இல்லாமல் [illegible] திரிந்து கொண்டும், பலராமனுக்கு ஒப்பற்ற தம்பியாய்ப் [illegible] ஆடம்பரங்களைச் செய்து, விளையாடிக் கொண்டும் இப்படி வரப் பார்த்தீர்களா? பசுக்களைத் திரும்பியோக மடக்கி மேய்த்துத் தண்ணீர் குடிக்கச் செய்து, அவற்றை மேயவிட்டுக் கொண்டு அப்பெருமான் விளையாடுவதைப் பிருந்தாவனத்தில் கண்டோம்.

(பிருந்தாவனம் – துளசிக்காடு. பிருந்தம் – துளசி.)

638. அனுங்க என்னைப் பிரிவுசெய்து ஆயர் பாடி கவர்ந்துண்ணும் *
குணுங்கு நாறிக் குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே? *
கணங்களோடு மின்மேகம் கலந்தாற் போல * வனமாலை
மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. (2)

தெளிவுரை

நான் வருந்தும்படியாக என்னைப் பிரிய விட்டுப் போய்த் திருவாய்ப்பாடியைக் கவர்ந்து அநுபவிக்கின்றவனும் வெண்ணெய் நாற்றம் வீசும் இளைய காளை போன்றவனுமான கண்ணபிரானைப் பார்த்தீர்களா? மின்னலும் மேகமும் கலந்தாற்போல் வனமாலை திகழப் பெற்றுத் தோழர்களோடு விளையாடுவதைப் பிருந்தாவனத்தில் கண்டோம். ஆயர்பாடியில் பல உற்பாதங்கள் நேர்ந்தன. ஆகையால் ஆயர்கள் பிருந்தாவனம் என்ற இடத்திற்குச் சென்று குடியேறினர். கண்ணன் சென்ற பிறகு அந்த வனம் [illegible].



639. மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை *
ஏலாப் பொய்கள் உரைப்பானை இங்கே போதக் கண்டீரே? *
மேலால் பரந்த வெயில்காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும் *
மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. (3)

தெளிவுரை

பெண்கள் விரும்பும்படிக் கவர்ச்சியாகப் பிறந்த பெருமானாய், மோகம் கொள்ளும்படி செய்கின்ற மணவாளப் பிள்ளையாய்ப் பொருந்தாத பொய்களைச் சொல்லுகின்ற கண்ணபிரானை இங்கே வரப் பார்த்தீர்களா? மேலே பரவின வெய்யிலைத் திருமேனியில் படாமல் தடுப்பதற்காக கருடனுடைய சிறகாகிற விதானத்தின்கீழ் வரும் அப்பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

(கேள்வி பதில் போல் அமைந்திருக்கிறது இப்பாசுரம். வினதைச் சிறுவன்– வினதா என்பவளின் மகன் கருடன்.)

640. காரத் தண் கமலக் கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தி* என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே *
போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால் யானைக் கன்றே போல் *
வேர்த்து நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. (4)

தெளிவுரை

கார்மேகத்தில் குளிர்ந்த தாமரை பூத்தாற்போன்றுள்ள திருக் கண்கள் என்ற பாசத்தால் என்னை அகப்படுத்தி என் நெஞ்சையும் கூடவே இழுத்துக் கொண்டு போய் விளையாடும் ஈசனைக் கண்டீர்களோ? போர்வையாகப் போர்த்த முத்துச் சட்டையையுடையதாய் அழகிய பெரிய யானைக் குட்டி போல வேர்த்து நின்ற பெருமான் விளையாடுவதைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

641. மாதவன் என் மணியினை வலையில் பிழைத்த பன்றி போல் *
ஏதும் ஒன்றும் கொளத்தாரா ஈசன் தன்னைக் கண்டீரே? *
பீதக ஆடை உடை தாழப் பெருங்கார் மேகக் கன்றே போல் *
வீதியார வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. (5)

தெளிவுரை

திருமகள் கேள்வனாய் என் மணி போன்றவனாய் வலையிலிருந்து தப்பிப் பிழைத்த ஒரு பன்றி போல் செருக்குற்று ஒருவர் கைக்கும் அகப்படாதவனை [illegible] கண்டீரோ? பீதாம்பரமாகிய உடை தொங்கப் பெரு கார்மேகக் கன்று போல திருவீதி நிறைய எழுந்தருளும் பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

(பிருந்தாவனம் – பிருந்தாவனம். துளசிக்காடு. அந்த இடத்திற்குப் [illegible])

642. தருமம் அறியாக் குறும்பனைத் தன் கைச் சார்ங்கம் அதுவே போல் *
[illegible] அழகிய பொருத்தமிலியைக் கண்டீரே *

உருவு கரிதாய் முகம் செய்தாய் உதயப் பருப்பதத்தின்மேல் *
விரியும் கதிரே போல்வானை விருந்தா வனத்தே கண்டோமே.(6)

**தெளிவுரை**

இரக்கம் இல்லாதவனாய்க் குறும்புகளைச் செய்பவனாய்த் தன் கையிலுள்ள சார்ங்க வில்லைப் போன்ற புருவ வட்டம் அழகு பெற்றவனாய்ப் பொருந்தி வாழப் பெறாதவனான அப்பெருமானைப் பார்த்தீர்களா? உடல் கருமை நிறமாய் முகம் சிவந்தும் இருப்பதால் உதய மலையின்மேல் எழுகின்ற சூரியன் போல் விளங்கும் அப்பெருமானைப் பிருந்தாவனத்தே பார்த்தோம்.

643. பொருத்த முடைய நம்பியைப் புறம் போல் உள்ளும் கரியானை *
கருத்தைப் பிழைத்து நின்ற அக் கருமா முகிலைக் கண்டீரே? *
அருத்தித் தாரா கணங்களால் ஆரப் பெருகு வானம் போல் *
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தா வனத்தே
கண்டோமே. (7)

**தெளிவுரை**

பொருத்தம் உடைய நம்பியை, உடம்பும் உள்ளமும் கறுத்தவனை, என் எண்ணத்தை ஏற்றுக் கொள்ளாதவனுமான அக்கருமையான முகிலைப் (கண்ணபிரானை) பார்த்தீர்களா? விரும்பப்படுகின்ற நட்சத்திரக் கூட்டங்களால் நிறைந்துள்ள ஆகாயம் போலப் பெருங்கூட்டமாய் எழுந்தருளியுள்ள அப்பெருமானைப் பிருந்தாவனத்தில் பார்த்தோம்.

644. வெளிய சங்கொன்று உடையானைப் பீதக ஆடை யுடையானை *
அளிநன் குடைய திருமாலை ஆழி யானைக் கண்டீரே? *
களிவண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ்பூங் குழல்கள்
தடந்தோள்மேல் *
மிளிர நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே. (8)

**தெளிவுரை**

வெளுத்த சங்கை உடையவனாய்ப் பீதாம்பரத்தை உடுத்திருப்பவனாய்க் கருணை உடையவனாய்ச் சக்கரத்தை உடையவனாய் அக்கண்ணபிரானைக் கண்டீர்களா? களிவண்டு எல்லாப் பக்கங்களிலும் கலந்தாற்போல் மணம் வீசுகின்ற மலரணிந்த குழல்கள் பெரிய திருத்தோள்களில் மேல் தாழ்ந்து நின்று விளையாட அப்பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

645. நாட்டைப் படையென்று அயன்முதலாத் தந்த நளிர்மாமலர் உந்தி *
வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் தன்னைக் கண்டீரே? *
காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளும் உடன்மடிய * (9)
வேட்டையாடி வருவானை விருந்தா வனத்தே கண்டோமே.



**தெளிவுரை**

உலகங்களைப் படைப்பாயாக என்று பிரமன் முதலான பிரஜாபதிகளை உண்டாக்கின திருநாபிக் கமலமான வீட்டை உண்டாக்கி விளையாடும் மேலான பெருமானைக் கண்டீர்களா? தேனுகாசுரனும் குவலயாபீட யானையும் பகாசுரனும் உடனே மாளும்படியாகக் காட்டிற் சென்று வேட்டையாடிவரும் அப்பெருமானைப் பிருந்தாவனத்தே கண்டோம்.

646. * பருந்தாட் களிற்றுக்கு அருள்செய்த பரமன் தன்னை * பாரின்மேல்
விருந்தா வனத்தே கண்டமை விட்டு சித்தன் கோதைசொல் *
மருந்தாம் என்று தம் மனத்தே வைத்துக் கொண்டு வாழ்வார்கள் *
பெருந்தா ளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியா தென்றும்
இருப்பாரே (10)

**தெளிவுரை**

பருத்த கால்களையுடைய கஜேந்திரன் என்னும் யானைக்கு அருள்செய்த திருமாலை இந்நிலத்தில் பிருந்தாவனத்தில் கண்டமை பற்றிப் பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் அருளிச் செய்த இப்பாசுரங்களைப் பிறவி நோய்க்கு மருந்தாம் என்று தங்கள் நெஞ்சில் வைத்து வாழ்பவர்கள் எம்பெருமானுடைய திருவடிகளின் கீழ் எப்போதும் பிரியாது இருப்பார்கள்.

**அடிவரவு**

பட்டி, அனுங்க, மால், கார்த்தன், மாதவன், தருமம், பொருத்தம், வெளிய, நாட்டை, பருந்தாள் – இருள்.

**ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம் .**

**நாச்சியார் திருமொழி ஸம்பூர்ணம்.**

UI8TA1T039

# ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த

## திருப்பள்ளியெழுச்சி

### தனியன்கள்

திருமாலை யாண்டான் அருளிச் செய்தது

1. *தமேவ மத்வா பரவாசு தேவம்*
*ரங்கே சயம் ராஜவதர் ஹணீயம்*
*ப்ரா போதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்*
*பக்தாங்க்ரி ரேணும் பகவந்தமீடே*

தெளிவுரை

மன்னரைப் போல்த் திருவரங்கத்தில் பள்ளி கொண்ட பரவாசுதேவனை போற்றுவதற்கு உரியவனாகவே கருதித் திருப்பள்ளி யுணர்த்தும் பாமாலை கட்டிய தொண்டரடிப் பொடி யென்னும் பகவானைத் துதிக்கிறேன்.

### திருவரங்கப் பெருமாள் அரையர் அருளிச் செய்தது
### இருவிகற்ப நேரிசை வெண்பா

2. *மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னிய சீர்**
*தொண்டர் அடிப்பொடி தொன்னகரம்* - வண்டு*
*திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானை* பள்ளி*
*உணர்த்தும் பிரான் உதித்த ஊர்.*

தெளிவுரை

வண்டுகள் படியும் கழனிகள் சூழ்ந்த திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள திருவரங்கத்து அம்மானைத் திருப்பள்ளி உணர்த்துபவராய்ப் பரம உபகாரகராய்த் தொண்டர் அடிப்பொடி யென்னும் ஆழ்வார் அவதரித்த திவ்விய தேசம் எதுவென்றால் சிறந்த வைதிகர்கள் பொருந்தி வாழ்கின்ற சிறப்பை யுடைய திருமண்டங்குடி என்னும் பழமையான நகரமாகும்.

# தொண்டர் அடிப்பொடி யாழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சி

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## (பூபாள ராகம் – ஆதி தாளம்)

917. *கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்*
*கனை இருள் அகன்றது காலையம் பொழுதாய் **
*மது விரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்*
*வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி **
*எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த*
*இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும் **
*அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்*
*அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.* (1)

**தெளிவுரை**

அரங்கத்தம்மா! சூரியன் கிழக்கில் உதய கிரியின் உச்சியில் வந்து சேர்ந்தான். அடர்ந்திருந்த இருள் அகன்றது. அழகிய தேவர்களும் அரசர்களும் ஒருவருக்கொருவர் முற்பட வந்து திரண்டு, தெற்குத் திசையில் நிறைந்து நின்றார்கள், இவர்களோடு வந்த இவர்களது வாகனமாகிய பெரிய ஆண் யானைத் திரள்களும் பெண் யானைத் திரள்களும் பெரிய வாத்தியங்களும் ஒலிக்கும் போது எல்லாத் திசைகளிலும் அலை எறிகின்ற கடல் ஒலியை ஒத்திருக்கிறது. ஆதலால், திருப் பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக.

(இங்குக் குறிப்பிடப்பட்ட 10 பாசுரங்களும் ,நித்யாநுசந்தாநத்தில் அனுட்டிக்கப்படும்.)

918. *கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்*
*கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ **
*எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்*
*ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிறகு உதறி **
*விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்*
*வெள்ளெயிறு உற அதன் விடத்தினுக்கு அனுங்கி **
*அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த*
*அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.* (2)

**தெளிவுரை**

கீழ்க் காற்று, செழுங் கொடிகளையுடைய முல்லையின் அழகிய மலர்களை அணைந்து கொண்டு இதோ வீசுகின்றது. மலர் அணையில் பள்ளிகொள் அன்னங்கள் பனியால் நனைந்து தம்முடைய அழகிய சிறகுகளை உதறிக் கொண்டு உறக்கம் விட்டு எழுந்தன. தன் காலை விழுங்கின முதலையினுடைய பிலம்புரை பேழ்வாய் வெள் எயிறு உற அதன் துன்பத்திற்கு மிகவும் ஆட்பட்ட கஜேந்திரனுடைய அருந்துயரைப் போக்கிய அரங்கத்தம்மா, பள்ளி யெழுந் தருளாயே!

919. சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி *
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின் *
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ *
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தருளாயே. (3)

தெளிவுரை

எல்லா இடங்களிலும் சூரிய கிரணங்கள் பரவி விட்டன. ஆகாயத்தில் நெருங்கிய நட்சத்திரங்களினுடைய மின் ஒளி சுருங்கி மிக்க ஒளியையுடைய இக் குளிர்ந்த சந்திரனும் ஒளி மழுங்கினான், இருள் அகன்றது. இந்த விடியற் காற்று பசுமையான சோலைகளிலுள்ள பாக்குமரங்களின் மடலைக் கீற அதனால் அழகிய பாளைகள் மணம் வீச அதை முகந்து கொண்டு வீசுகின்றது. வலிய ஒளியுடைய சக்கரத்தை ஏந்திய அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தருளாயே!

920. மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும் *
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை *
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம் *
ஆட்டிய அடுதிறல் அயோத்திஎம் அரசே
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தருளாயே. (4)

தெளிவுரை

உயர்த்தியும் இளமையும் தங்கிய எருமைகளை மேய்க்கக் கட்ட விழ்த்து விடுகிற ஆயர் ஊதுகிற புல்லாங் குழலின் நாதமும் எருதுகளின் கழுத்திற் கட்டியுள்ள மணிகளின் ஓசையும் ஆகிய இவ் இரண்டும் கூடின ஒசை, திசையெங்கும் பரவியது. கழனிகளிலுள்ள வண்டுகளின் திரள் ஆரவாரித்துக் கொண்டு கிளம்பின. இலங்கையர் குலத்தை வாட்டிய வரிசிலை வானவர்ஏறே! விசுவாமித்திர முனிவருடைய யாகத்தை நிறைவேற்றி முடிவில் அவபிரதம் எனும் மங்கள ஸ்நானம்* செய்வித்தருளின விரோதிகளை ஒழிக்கவல்ல வீரமுடையவனாய் அயோத்தி யாளும் எம் அரசே! அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

921. புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி *
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த *
அலங்கலம் தொடையல் கொண்டு அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா *

இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே. (5)

தெளிவுரை

சோலைகளிலுள்ள பறவைகளும் ஆரவாரம் செய்கின்றன. இரவு கழிந்து விடியற் காலம் வந்தது கீழ்த்திசையில் செய்கின்ற கடலினுடைய ஒலி வியாபித்தது. தேனைப் பருகிக் களிக்கின்ற வண்டுகள் ஒலிசெய்யும் பலவகைப் பூக்களால் தொடுக்கப் பெற்ற அழகிய மாலைகளைக் கொண்டு தேவர்கள் தேவரீருடைய திருவடிகளைப் பணிய வந்துள்ளனர். ஆகையால், எம்பெருமானே! விபீடணன் வழிபாடு செய்கிற கோயிலில் எழுந்தருளி யிருக்கிற பெருமானே! பள்ளியெழுந்தருளாயே.

மிழற்றுதல் – ரீங்காரம் செய்தல், ஒலி செய்தல்.

922. இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ?
இறையவர் பதினொரு விடையரும் இவரோ!*
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ?
மருதரும் வசுக்களும் வந்துவந்து ஈண்டி *
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்
குமர தண் டம்புகுந்து ஈண்டிய வெள்ளம் *
அருவரை யனைய நின் கோயில்முன் இவரோ?
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே. (6)

தெளிவுரை

அழகிய பெரிய தேரோடு கூட பன்னிரண்டு ஆதித்தர்களும், உலகக் காவலர்களான ஏகாதச ருத்திரர்களும், மயில்வாகனனான சுப்பிரமணியனும், மருத் கணங்களான ஒன்பதின்மரும், அஷ்ட வசுக்களும் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு வந்து நெருங்கி நிற்க, இவர்களுடைய வாகனங்களான குதிரைகள் பூட்டிய தேர்களும் பாட்டும் கூத்துமாய்த் தேவர்கள் வந்து புகுந்து நெருங்கியிருக்கிறார்கள். பெரிய மலை போன்ற கோயிலில் எழுந்தருளியுள்ள அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

923. அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ?
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ?*
இந்திரன் ஆனையும் தானும்வந் திவனோ?*
எம்பெரு மான்! உன் கோயிலின் வாசல்*
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான் *
அந்தரம் பாரிடம் இல்லைமற் றிதுவோ?
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே. (7)

தெளிவுரை

எம்பெருமான! உன் கோயிலின் வாசலில் தேவேந்திரனும் அவனுடைய வாகனமான ஐராவதமும் வந்திருப்பதோடு அண்டத்துள் இருக்கின்ற

தேவர்களும் அவர்களுடைய பரிவாரங்களும் தவசிகளும் மருத்கணங்களும் யட்சர்களும் கந்தர்வர் நெருக்கவும் வித்தியாதரர்கள் தள்ளவும் திருவடி தொழுவான் மயங்கினர். ஆகாயமும் பூமியும் இடமில்லாமல் நிரம்பி உள்ளன, அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

*924. வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க*
*மாநிதி கபிலைஒண் கண்ணாடி முதலா **
*எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு*
*ஏற்பன வாயின கொண்டு நன் முனிவர் **
*தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ*
*தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி **
*அம்பர தலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்*
*அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே.* (8)

தெளிவுரை

தேவருக்குச் சமர்ப்பிப்பதற்காக மணமுள்ள அறுகம்புல்லும் சிறந்த சங்கநிதி பதுமநிதிகளும் கொண்டு வந்து தேவர்களும் காமதேனுவும் ஒளி பொருந்திய கண்ணாடி முதலாக எம்பெருமான் பார்ப்பதற்குத் தகுதியான உபகரணங்கள் எல்லாவற்றையும் கொண்டு முனிவர்களும் தும்புரு நாரதர்களும் வந்து நின்றார்கள். இதுவும் அன்றி சூரியனும் துலங்கொளி பரப்பி உதயமானான். இருள் ஆகாயத்தினின்றும் நீங்கிப் போயிற்று. அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

*925. *ஏதமில் தண்ணுமை எக்கம் மத் தளி*
*யாழ்குழல் முழவமோடு இசைதிசை கெழுமி **
*கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்*
*கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம் **
*மாதவர் வானவர் சாரணர் இயக்கர்*
*சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான் **
*ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள*
*அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தருளாயே.* (9)

தெளிவுரை

குற்றமற்ற சிறுபறையும் ஒற்றைத் தந்தியுடைய எக்கமும் மத்தளமும் வீணையும் புல்லாங்குழல்களுமாய் எல்லாத் திசைகளிலும் இவற்றின் முழக்கத்தோடு இசை கெழுமி கீதங்கள் பாடினர். அவர்கள் கின்னரர்களும் கருடர்களும் கந்தர்வர்களும் மற்றுமுள்ளவர்களும் ஆவர். மாதவர்களும் தேவர்களும் சாரணர்களும் இயக்கர்களும் சித்தர்களும் தேவரீருடைய திருவடிகளைத் தொழுவதற்காக இரவெல்லாம் வருந்திக் கொண்டு இருக்கின்றனர். ஆகையால் அவர்களுக்குப் பகல் ஓலக்கம் அருள அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே. ( ஓலக்கம்— காட்சி தருதல். ).

926. கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ!*
துடியிடை யார்சுரி குழல் பிழிந் துதறித்
துகிலுடுத்து ஏறினர் சூழ்புனல் அரங்கா!*
தொடை யொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி யென்னும்
அடியனை*. அளியன்என்று அருளிஉன் அடியார்க்கு
ஆட்படுத்தாய்! பள்ளி எழுந்தருளாயே. (10)

தெளிவுரை

திருக்காவேரியால் சூழப்பட்ட திருவரங்கத்தில் கண் வளர்ந்தருளும் பெருமானே! மணமுள்ள தாமரை மலர்கள் மலர்ந்து விட்டன. சூரியனும் கடலில் உதய கிரியில் வந்து தோன்றினான். மாதர்கள் சுருண்ட மயிர்முடியை நீர்ப்பசையறப் பிழிந்து உதறிவிட்டு, துகில் உடுத்துக் கரையேறிவிட்டார்கள். திருத்துழாய் மாலையும் பூக்குடலையும் ஏந்தி விளங்கும் அடியேனை அளியன் என்று அருளி உன் அடியார்க்கு ஆளாக்குவாய். அதற்காக, திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக.

அடிவரவு

கதிர், கொழு, சுடர், மேட்டு, புலம், இரவி, அந்தரம், வம்பவிழ், ஏதம், கடி — அமலன்.

தொண்டரடிப் பொடியாழ் வார் திருவடிகளே சரணம்.

ஏ-4 பக்தி இலக்கியம் R. RATHIKA U18TA1T039



பொருந்திய அதன் திரைகளிடையே தன் தோழிப் பெண்கள் திரளோடு இன்பமாய் ஆடிக் கொண்டிருக்கையில், நாணலிடையே நின்று மறைந்திருந்த பேழையை நிமிர்ந்து நோக்கி, 'அதனை எடுத்து வாருங்கள்' என்றாள்.

க.ரை: ஆற்றில் குளித்த எசித்து மன்னன் மகள் பெட்டியை எடுக்கச் சொன்னாள். 8

**எடுத்தமஞ் சிகத்து நோக்கி யிளமதி முகத்திற் றண்ணீர்**
**விடுத்தபைம் பனியோ கஞ்சம் விள்முகத் துதிர்த்த முத்தோ**
**கடுத்ததுன் பாற்றா கண்ணீர் கான்றகால் முகத்தைக் கண்டு**
**தொடுத்ததன் னணிகள் பெய்தென் றோன்றலென் றரசி**
**கொண்டாள். 1941**

பொ.ரை: தோழியர் எடுத்த பேழையினுள் இளவரசி நோக்கி, அக்குழந்தை கண்ணீர் பொழிந்தபோது, இளம்பிறை போன்ற ஒளி முகத்தில் தண்ணீராக விழுந்த பசுமையான பனியோ, தாமரை விரியுங் காலத்து உதிர்ந்த முத்தோ என்று மதிக்கத்தக்க அம் முகத்தைக் கண்டு, தான் அணிந்திருந்த அணிகலன்களைக் கழற்றி அதற்கு இட்டு, 'இவன் என் மகன்' என்று ஏற்றுக் கொண்டாள்.

க.ரை: பெட்டியிலிருந்த குழந்தையை 'இவன் என் மகன்' என இளவரசி ஏற்றுக் கொண்டாள். 9

**பாலநல முலையி னாளைப் பாலனுக் கழைமி னென்னாத்**
**தானல மாட்த் தெய்தித் தையலார் கமழ்நீ ராட்டிச்**
**சேநல மெழப் பொன் னாழி சிலம்புகிண் கிணிகள் பூட்டி**
**மீனல மண்ணிந்த நாகு விதுவெனத் தோன்றினானே 1942**

பொ.ரை: 'இப் பாலனுக்கென்று பால் வளமுள்ள முலை கொண்ட ஒரு தாதியை அழைத்து வாருங்கள்' என்று தோழியர்க்குச் சொல்லி, அவள் தன் நல்ல மாளிகையை அடைந்தாள். தோழிப் பெண்டிர் அம் மகனை மணம் கமழும் நீரால் குளிப்பாட்டி, அவன் அழகு மேலும் மிகுமாறு பொன் மோதிரமும் சிலம்பும் சதங்கையும் பூட்டினர். அப்பொழுது அவன் நிலாப் போலத் தோன்றினான்.

க.ரை: குழந்தைக்குத் தோழிமார்கள் ஆடை அணிகளைப் பூட்டி அழகு செய்தனர். 10

**தாயென வுணரா தாயைத் தனயனை வளர்க்கக் கூட்டிச்**
**சேயென விமிழிற் கண்டாள் செறிந்துதன் னுளத்திற் றைத்த**
**நோயென லறுத்தொன் றென்னா நுனித்தவன் பியல்பிற் பன்னாள்**

பொ.ரை: அத் தோழியர், அம்மகனின் தாயையே, அவன் தாயென்று அறிந்து கொள்ளாமல், அவனை வளர்க்கக் கூட்டி வந்தனர். அத்தாய் அவன் தன் மகனே என்பதை இன்பத்தோடு கண்டாள்; நெருங்கித் தன் உள்ளத்தில் தைத்த துன்பம் என்பதை அறவே ஒழித்து, மிகுந்த அன்பின் இயல்பால், தூய மணியின் சாயல் கொண்ட அம் மகனைப் பல நாள் வளர்த்தாள்.

க.ரை: குழந்தையின் உண்மைத் தாயே தாதியாக வந்து அவனை வளர்த்தாள். 11

வளர்ந்தவெண் மதியொத் தன்னான் வளர்ந்துமோ யிசனென்றோதித்
தளர்ந்ததன் குலத்தை யோம்பத் தற்பரன் பணிப்ப வங்க
ணுளர்ந்தபன் முயற்சி யாவு மொழுங்கினீ ருணர்தீ ரன்றே
கிளர்ந்தநல் வறிவி னோர்க்குக் கிளர்க்கநா னுரைப்ப தென்னோ. 1944

பொ.ரை: அவன் திங்கள்போல் அங்கு வளர்ந்தான்; மோயிசன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான். பின், அடிமை நிலையால் தளர்ந்த தன் குலத்தைப் பேணுமாறு ஆண்டவன் கட்டளையிடவே, அங்கு அவன் நடத்திய பல காரியங்கள் எல்லாவற்றையும் ஒழுங்காக நீங்களே அறிவீர்கள் அல்லவா?

க.ரை: அவன்தான் மோயிசன். அவன் செயல்களை அனைவரும் அறிவர். 12

ஐயெடுத் தொளிரத் தோன்றற் கன்பெடுத் துயிரைக் காக்கக்
கையெடுத் தளித்த தென்றிக் கங்கையைக் கையா றென்னு
மெய்யெடுத் திசைத்த நாம் விதியிதே யென்றான் வானோன்
மையெடுத் திரைத்த யாறு வலத்திலிட் டவரும் போனார். 1945

பொ.ரை: "அழகு கொண்டு ஒளிர்ந்த அம் மகனுக்கு அன்பு பூண்டு, அவனது உயிரைக் காக்கத் தன் திரையாகிய கையால் எடுத்து வந்து காத்தது என்பதைக் கருதி, இவ்வாற்றைக் கையாறு என்று அழைப்பர். உண்மையை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இப் பெயர் வந்த முறை இதுவாகும்" என்றான் கபிரியேல் என்னும் வானவன். அவ்வாற்றை வலப் பக்கமாக விட்டுத் திருக் குடும்பத்தினர் மேலும் தொடர்ந்து சென்றனர்.

க.ரை: அம்மகனைத் தன் திரையாகிய கையால் காத்தமையால் இதற்குக் கையாறு எனப் பெயர். 13

**பிணி தீர்க்கும் சுனை நீர்**

மீன்சொ ரிந்தமுடி வேய்ந்தொளிர் தாயுந்
தேன்சொ ரிந்தகொடி யந்திற லோனு
நன்சொ ரிங்கநவை தீர்மக வேங்கிக்

பொ.ரை: ஒளிரும் தாயாகிய மரியாளும், சூசையும், நான் செய்த பாவங்களைத் தீர்க்க அவதரித்து வந்த குழந்தை நாதனை ஏந்தியெடுத்துக் கொண்டு, வழியில் மணம் பொழிந்த ஒரு மலர்த் தடாகத்தைக் கண்டு, அதன் அருகே சென்றனர்.

க.ரை: மரியாளும் சூசையும் ஆண்டவனோடு மலர்த் தடாகம் அருகே சென்றனர்.

14

மக்க டங்குவடு நீத்தவர் வைகிச்
சொக்க டங்குசுத னைத்துதி பாட
மிக்க டங்குகுயில் பாடலின் விள்ளி
யிக்க டங்குமல ரின்புறல் கண்டார். 1947

பொ.ரை: அம்மூவரும் அதன் கரையில் தங்கினர். அப்பொழுது, அழகெல்லாம் ஒருங்கே பொருந்திய திருமகனைத் துதி பாடுவனவாக, தொகையால் மிகுந்து அடக்கங்கொண்ட குயில்கள் பாடுதலினால், மலர்கள் விரிந்து இன்புறுதலைத் தாம் கண்டனர்.

க.ரை: ஆங்கு குழந்தைநாதனைக் குயில்கள் பாடிக் குதூகலித்தன.

15

கரைகி டந்தவிவர் காட்டரு ளன்ன
நிரைகி டந்தநிழ லீண்டரு வெல்லாம்
விரைகி டந்தமலர் விள்ளிய காலை
நுரைகி டந்தனகள் நுண்மண லார்ந்தே. 1948

பொ.ரை: கரைமேல் இருந்த இம்மூவர் நமக்குக் காட்டும் அருள் போல, நெடிய மரங்களெல்லாம் மணம் பொருந்திய தம் மலர்களை விரித்தபோது, அவற்றின் தேன் துளிகள் நுண்ணிய மணல் மீது நுரை நுரையாய்க் கிடந்தன.

க.ரை: மரங்களில் உள்ள மலர்கள் சிந்திய தேன்துளிகள் மணல்மீது நுரையாகக் கிடந்தன.

16

கோளை யுண்டகுழல் மென்கொடி யீன்ற
காளை யுண்டவத னக்கவின் காண
வாளை யுண்டகுனை வாவிம லர்ந்தே
தாளை யுண்ட மலர் தன்விழி யாமால். 1949

பொ.ரை: மரியாள் பெற்ற காளையாகிய குழந்தைநாதன் கொண்டிருந்த முகத்தின் அழகைக் காணும் பொருட்டு, வாளை மீன்களைக் கொண்ட ஊற்று நீருள்ள தடாகம் மலர்ந்து, தன்னிடைக் கொண்டுள்ள கருங்குவளை மலர்களைத் தன் கண்களாகக் கொண்டு நோக்கும்.

க.ரை: குழந்தைநாதனின் முகத்தின் அழகை எல்லா மலர்களும் மலர்ந்து பார்த்தன. 17

சொற்க லத்திலுயர் வோர்சுவை மாந்தப்
பொற்க லத்திலமு தேபொழி வார்போல்
விற்க லத்திலொளிர் பூவிரி தாது
தற்க லத்தினிறை தந்தன தேனே. 1950

பொ.ரை: அம் மூவரும் சுவையோடு அருந்துமாறு, பொற்கலத்தில் அமுதைப் பொழிந்து தருவார்போல, வில்லொளி பரப்பும் அணிகள்போல் ஒளிரும் பூக்கள், விரித்த தம் இதழ்களாகிய கலங்களில் தேனை நிறைவாக ஏந்தித் தந்தன.

க.ரை: மூவரும் அருந்த பூக்கள் தேனைத் தந்தன. 18

நான்க லந்தநவை தீர வல்லோர்
கான்க லந்தகனி கட்கனி வுண்டு
வான்க லந்தவுடு மான்மலர் கான்ற
தேன்க லந்ததெளி தீங்கய முண்டார். 1951

பொ.ரை: நான் பொருந்தக் கொண்ட பாவங்களைத் தீர்க்க வந்த அருள் கொண்ட அந்நல்லோர், மணம் பொருந்திய கனிகளைக் கனிவோடு உண்டு, மலர்கள் பொழிந்த தேன் கலந்த இனிய தடாகத்துத் தெளிந்த நீரை அருந்தினர்.

க.ரை: அவர்கள் கனிகளை உண்டு குளத்து நீரைப் பருகினர். 19

மணிநி றத்தவெழின் மைந்தனை மூடு
மணிநி றத்தநுரை யந்துகி லாடை
பணிநி றத்தவொளிர் பாணியி னல்லாள்
புணிநி றத்தமலர் பூண்சுனை தோய்த்தாள். 1952

பொ.ரை: நல்லவளாகிய மரியாள், மாணிக்க நிறம் கொண்ட தன் அழகிய மகனைப் பொதியும் அழகிய நிறமுள்ள நுரை போல் மெல்லிய பஞ்சு நூல் ஆடையை, மகுடம் போல் மலர்களைப் புனைந்து நின்ற அத்தடாகத்தில் நனைத்துத் துவைத்தாள்.

க.ரை: குழந்தைநாதனின் மீதிருந்த ஆடையை அக்கய நீரில் நனைத்துத் துவைத்தாள். 20

தோய்ந்த தன்மையொடும் அச்சுனை நன்னீர்
மேய்ந்த தன்மையொடு வெம்பிணி யாவும்
வாய்ந்த தன்மையொடு மாறவு நாத
னீய்ந்த தன்மையுள தின்றும தெஞ்சா. 1953

பொ.ரை: அவ்வாடை தன்னில் தோய்ந்த தன்மையால், அந்தத் தடாகத்து நல்ல நீரை யாரும் உண்ட தன்மையால்

கொடிய நோய்கள் யாவும் வாய்ந்த தன்மையொடு மாறவும் ஆண்டவன் வரம் தந்த தன்மை கொண்டுள்ளது. அவ்வரம் இன்றும் குறையாது நிலை பெறுகின்றது.

சு.ரை: ஆண்டவன் ஆடையைத் துவைத்த அக்குளநீர் நோய் நீக்கும் தன்மை உடையது ஆயிற்று.

21

அருளின் வீங்குவர மஃதென வோர்ந்து
தெருளின் வீங்கிநறு தீங்கய வாவி
சுருளின் வீங்குதிரை சூழ்கரை மோதிப்
பொருளின் வீங்குமடி போற்றுவ போன்றே. 1954

பொ.ரை: இனிய நீருள்ள ஆழமான அத் தடாகம், அது ஆண்டவன் அருளால் பெருகிய வரமென்று உணர்ந்து, அத்தெளிவினால் பொங்கி, சுருட்டி எழும் திரைகள் சூழ்ந்துள்ள கரைகளில் மோதின. அத்தோற்றம், அம்மூவர் அடிகளை அத்திரைகள் போற்றுவதுபோல் இருந்தது.

சு.ரை: அக்குளநீர் அலைகள் மூவரின் அடிகளையும் போற்றுவதுபோலக் கரைகளில் மோதின.

22

அலையொ ருங்குதமு ளாடிய பாலா
லிலையொ ருங்குவிரி யேரல ராடத்
தலையொ ருங்குமிசை தன்கர மேந்து
நிலையொ ருங்குசுனை நீரிய தோற்றம். 1955

பொ.ரை: அலைகளெல்லாம் அசைந்தாடிய தன்மையால், இலைகளிடையே இடமெங்கும் விரிந்து நின்ற அழகிய மலர்கள் சேர்ந்து ஆடவே, தன் தலை மீது தன் கைகளையெல்லாம் ஒருங்கே ஏற்றித் தொழுத நிலையை ஒருங்கே காட்டியது அத்தடாகத்தின் அத்தன்மையான தோற்றம்.

சு.ரை: தடாகத்தின் நிலை அவர்களைத் தொழுவதுபோல இருந்தது.

23

**பறவைகளின் மகிழ்ச்சி**

பானேரிள நிலவூறிய பணிமாமதி முகமுன்
வானேரிள பனிமானிய மதுமாதரு வடியத்
தேனேரிள குரலோடிள வளிபாவிசை திருக
மீனேரிள சிறைமாமயி னடமாடின மிகவே. 1956

பொ.ரை: அழகிய நிறைமதி போன்ற திருமகன் முகத்தில் வானம் தரும் மென்மையான பனியைப் போன்ற தேனைப் பெரிய மரங்கள் வடித்து நிற்க, இளங் குரலோடு இள வண்டுகள் பாடல்களை இசையோடு பாடிக் கொண்டிருக்க, இளஞ்சிறகு [illegible]

க.ரை: குழந்தைநாதன் முன் கருமயில்கள் கூடி நடனமாடின. 24

கயலொத்தன விழியுற்றன களிமாதர்கள் கருவிட்
புயலொத்தன திரையுட்களி விளையாடின புரைகண்
டியலொத்தன கயமுட்டிரி யிறகாருயி ரினமும்
வியலுற்றன சிறைவிட்டயல் விளையாடின வினிதே. 1957

பொ.ரை: கயல் மீன் போன்ற கண்களைக் கொண்ட களிப்புள்ள மகளிர், தடாகத்துத் திரையுள்ளே களித்து விளையாடின ஒப்புமை கண்டு, அத்தடாகத்துள் திரியும் இறகு கொண்ட அன்னம் போன்ற உயிரினங்களும், அகலமான தம் சிறகுகளை விரியவிட்டு, அம்மூவர்க்கும் அயலே இனிதாய் விளையாடிக் கொண்டிருந்தன.

க.ரை: அம் மூவருக்கும் அயலே எல்லா உயிரினங்களும் விளையாடின. 25

புள்ளும்பல குருகும்பக வினமுங்கவின் பொருவா
விள்ளும்பரி சனமும்பனக விலகுங்களி விளைபோ
ருள்ளும்படி குறுகும்படி யுகளும்படி யுளவே
துள்ளும்பரி யெனவந்தெதிர் தொடர்கின்றவை துறுமால். 1958

பொ.ரை: பறவைகளும், நாரைகளும், கொக்கு இனங்களும், அழகில் பிறவெல்லாம் ஒவ்வாதன என்று புகழ்ந்து சொல்லப்படும் தன்மை கொண்ட அன்னங்களும், களிப்பு விளைவிப்பதுமான ஒரு போரை நினைந்த வண்ணமாகவும், ஒன்றையொன்று நெருங்கும் தன்மையாகவும், துதிக்கும் தன்மையாகவும் அங்கு உள்ளன; அவை குதிக்கும் குதிரை போல் அங்கு வந்து, அம்மூவர்க்கும் எதிரே தொடர்ந்து வந்து நெருங்கி நிற்கும்.

க.ரை: எல்லாப் பறவைகளும் கூடி வந்து அம்மூவர் எதிரே நெருங்கி நின்றன. 26

தேங்காவியொ டுளமற்றலர் திளைதேறலை யுணவந்
தாங்காயின வளிபற்பல வரவத்தொலி யதிரத்
தூங்காவொலி முரசொத்தெழு தொனியிற்றமு டொடர்போர்
நீங்காதன பறவைக்குல நிகருஞ்சமர் நெடிதே. 1959

பொ.ரை: தேனை உண்ண வந்து அங்குச் சேர்ந்த வண்டுகள் தம் இனத்துக்கு ஏற்பப் பற்பல ஆரவார ஒலியோடு முழங்கவும், ஓயாது ஒலிக்கும் முரசு போன்று எழும் ஓசையோடு தமக்குள் தொடரும் விளையாட்டுப் போர் நீங்காத பறவை இனங்கள்